**அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் ஒரே முதலமைச்சர், மு.க.ஸ்டாலின்!**

# பா.ஜ.க.வின் பாசிசத்தை வீழ்த்த வள்ளலாரின் நெறியையும் ஏற்போம்!

## திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் “வள்ளலார் - 200” சிந்தனையரங்கில் ஆ.இராசா எம்.பி. பேச்சு!

**திண்டுக்கல், நவ.4 -**

**திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திரு விழாவில் “வள்ளலார் - 200” சிந்தனையரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு பேசும்போது “பா.ஜ.க.வின் பாசிசத்தை வீழ்த்த வள்ளலாரின் நெறியையும் ஏற்போம்” என்றும் “அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்றும் கூறினார்.**

**திண்டுக்கல் இலக்கியக் களம் சார்பில் 13.10.2023 அன்று நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு “வள்ளலார் 200” சிந்தனையரங்கில் ஆற்றிய உரை வருமாறு: -**

தமிழ் நாட்டில் நடைபெறும் புத்தகத் திருவிழாக்களில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் நம்முடைய முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அரசும் அதிலே பங்கெடுக்கும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டு, “தமிழ்ச் சமுதாயம் அறிவார்ந்த சமுதாயமாக தொடர வேண்டும்; அடுத்த தலைமுறைக்கும் அந்த அறிவு சென்று சேர வேண்டும் என்பதற்காக வாசிப்பு வழக்கத்தை இளைஞர்களிடத்தில், பெரியவர்களிடத்தில் ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்கள் நடைபெற்று, புத்தகங்கள் வாங்குவதும் வாசிப்பதும் மட்டுமல்லாமல், மாலை நேரங்களில் இப்படி சிந்தனை களங்களை அமைத்து, அதில் அறிவை பரப்புகின்ற, பகிர்ந்துகொள்கின்ற நல்ல நிகழ்வுகள் இன்றைக்கு மாநிலம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கே மனம் செம்மாந்து நிற்கிறதோ; எங்கே அறிவு விடுதலை பெற்று விளங்குகிறதோ; எங்கே குறுகிய சாதி மதப் பிளவுகளால் உலகம் உடையாமல் ஒன்றுபட்டு நிற்கிறதோ; எங்கே பகுத்தறிவு வெள்ளம் மூடநம்பிக்கை என்னும் பாலைவனத்தில் வீழ்ந்து பாழ்படாமல் இருக்கிறதோ; எங்கே பரந்து விரியும் சிந்தனையாலும், செயலாலும் எண்ணங்கள் வழிநடத்தப்படுகிறதோ, அங்கிருந்து என் அன்னை நாடு விழித்தெழ வேண்டும் என்று தாகூர் கனவு கண்டார்.

### வள்ளலார் பற்றி இருவேறு கருத்துகள்!

அறிவு வளர்ந்தால்தான் தன் அன்னை நாடு விழிப்படையும் என்று தாகூர் கண்ட கனவை நிறைவேற்றுகின்ற ஒரு முதலமைச்சர் நமக்குக் கிடைத்திருக்கின்ற காரணத்தினால் இந்த மாலை நேரத்தில் இவ்வளவு பேரும் நாம் கூடி வள்ளலாரை பற்றி சிந்திக்கின்ற ஒரு வாய்ப்பாக இந்த புத்தகத் திருவிழா அமைந்திருக்கிறது. எனவே அரசுக்கும், முதலமைச்சருக்கும் என்னுடைய நன்றியை உங்களின் சார்பில், நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் எத்தனையோ மேடைகளில் பேசி இருக்கிறேன். ஆனால் வள்ளலாரை பற்றி அவ்வப்போது மேடைகளில் தொட்டிருக்கிறேனே தவிர, முழுமையாக அவரை ஆய்ந்து பேசுகின்ற வாய்ப்பினை பெறவில்லை. அப்படி ஒரு வாய்ப்பை அல்லது ஒரு நெருக்கடியான சோதனையை திண்டுக்கல் சிந்தனைக் களம் இந்த புத்தகத் திருவிழா வழியாக எனக்கு தந்திருக்கிறது.

ஏனென்றால் வள்ளலாரை பற்றிய இருவேறு கருத்துக்கள் அவருடைய நெற்றியில் திருநீறு இருக்க வேண்டுமா? இருக்கக் கூடாதா? என்பதில் தொடங்கி, அவர் சைவ சமயமா? சைவ சமயம் இல்லையா? என்பதில் வளர்ந்து,

அவர் ஆன்மிகத்தில் புரட்சி செய்தாரா? இல்லை இருக்கின்ற அமைப்பை ஏற்றுக் கொண்டாரா, சீர்திருத்தம் வழங்கினாரா? என்பது போன்ற விவாதம் உச்சம் பெறுகின்ற இக்கால கட்டத்தில் வள்ளலார் வெவ்வேறு வடிவங்களில் பேசப்படுகிறார்; விவாதிக்கப்படுகிறார். அந்த விவாத தளத்தை நம்முடைய முதல்வர் தந்த ‘வள்ளலார் 200’ விழாக்களில் முன்னெடுப்பது இன்றைய ஆன்மிகத் தேடலாக மட்டுமல்ல; அரசியல் தேடலாகவும் அமைய வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

### அறிவு சபை தோற்றுவித்த முதல் புரட்சியாளர்!

வள்ளலார் என்ன போதித்தார் என்பதை பெரிதாக நான் மீண்டும் விளக்கி இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவ்வளவு நூல்கள் அவரைப்பற்றி கிடைக்கின்றன. ‘சுத்த சன்மார்க்க சங்கம்’ என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார். ஞான சபையை ஏற்படுத்தினார். மடங்கள் இருந்த மண்ணில் அறிவு சபையை தோற்றுவித்த முதல் புரட்சியாளர், ஆன்மிகத்தில் அவர்தான். பசிப்பிணியை போக்க வேண்டும் என்று விரும்பினார்.

இருக்கிற எல்லா அமைப்புகளையும் கடவுளாக இருந்தாலும், மதமாக இருந்தாலும் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஒரு புதிய மாற்று பாதையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று விரும்பினார். அதற்கு அவர் சொன்ன தத்துவங்கள் எல்லாம் ஜீவகாருண்யம், கருணை, அன்பு, பசி போக்கல் என்று மொத்தமாக தொகுத்து 10 நிமிடத்தில் அல்லது 5 நிமிடத்தில் விளக்கிச் சொல்லிவிடலாம். ஆனால் வள்ளலாரை நான் மீண்டும் படிக்கிறபோது, வள்ளலார் இன்றைக்கு எப்படி தேவைப்படுகிறார் என்று எண்ணத் தோன்றியது. ஏனென்றால் வள்ளலார் இந்த சமுதாயத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். ஒரு மனிதரைப் பற்றி பார்க்கிறபோது அவருடைய தொடக்க காலம், இடைக்காலம், கடைசி காலம் இவற்றையெல்லாம் கருத்தியல் ரீதியாக பார்க்க வேண்டி இருக்கிறது. எல்லா தலைவர்களும் ஒரே மாதிரி இருந்ததில்லை. எனக்குத் தெரிந்து கலைஞர் சொல்வார், “நான் பிறந்து அறிவு வளர்கிற போதே சிந்திக்கின்ற உணர்வை பெற்றவன்; 13 வயதிலேயே சுயமரியாதை எண்ணம் கொண்டவன்; மரணம் வரை சுயமரியாதைக்காரனாகத்தான் இருக்க விரும்புகிறேன்” என்று.

வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் பார்த்துக் கொள்பவன் யாரோ, அவன்தான் உயர்ந்த மனிதன் என்று பெர்னாட் ஷா சொன்னார். ஆனால் அப்படி இருந்தே தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை. மனிதன் மாறுதலுக்கு உட்பட்டவன்தான். அந்த மாறுதலுக்கான காரணம் நியாயமானதா, பொருத்தமானதா, சுயநலமற்றதா என்றுதான் ஆராய வேண்டுமே தவிர; மாறுதலே கூடாது என்று சொல்ல முடியாது.

கண்ணதாசன் ஒரு காலத்தில் நாத்திகம் பேசியவர். ‘நாத்திகம் பேசி நாதழும்பு ஏறியது என்னுடைய நா’ என்று சொல்லி பின்னாளில் வருந்தியவர். அண்ணாவின் அணிவகுப்பில் அவர் வலம் வந்த காலங்கள் உண்டு. ‘அர்த்தமுள்ள இந்து மதம்’ என்ற புத்தகம் எழுதிய கண்ணதாசன், இந்து மதத்தின் சாரங்களில் மூழ்கி மூழ்கி திழைத்து இதுதான் மார்க்கம், “இதுதான் எனக்கு இன்பம். இதைப் பின்பற்றுங்கள்” என்று சொன்ன கண்ணதாசன், பெரியார் மறைந்தபோது பாடினார்,

**“நீதிமன்றின் நீதிக்கும் நீதி சொல்வார்;**
**நெறிகெட்டு வளர்ந்தவர்களை நிமிர்த்தியவர்;**
**ஜாதி எனும் நாகத்தை தாக்கித் தாக்கி;**
**சாகடித்த பெருமை அவர் தடிக்கே உண்டு”**

என்று பாடினார். அது பெரியாரைப் பற்றி கண்ணதாசனின் மதிப்பீடு. ஆனால் கண்ணதாசனின் வாழ்க்கையில் முரண்பாடு இருந்ததா என்றால் நிச்சயமாக இருந்தது. கடைசியில் அந்த முரண்பாடுகளை காலம் கவனத்தில் வைக்கவில்லை; அவர் பழுத்த பக்திமானாய் - கண்ணனை ஆராதித்த இந்து மத பற்றாளராய்தான் மறைந்தார்; அது அவருக்கு அடையாளமாய் நின்றது; நிற்கிறது.

### புரட்சிக் கவிஞரின் அடையாளம்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர் வாழ்க்கையின் முற்பகுதியில் ‘சுப்ரமணிய துதியமுது’ எழுதியவர். இறை நம்பிக்கை கொண்ட கனகசுப்புரத்தினம் என்ற புலவர்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆனார். பக்தி மட்டுமல்ல; பின்னாளில் அழகியலை, இயற்கையைவானத்தைகடலைகாட்டைஆறுகளைதென்றலை அவர் கவிதைளயில் புனைந்து காட்சிப்படுத்திய



போது ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியரையும் மிஞ்சினார் என்று போற்றப்பட்டார். ஆனால் அவரை இந்த அடையாளங்கள் நிறைவு செய்யவில்லை.

**இருட்டறையில் உள்ளதடா உலகம்-சாதி**
**இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!**
**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழுகின்றாரே**
**வாயடியும் கையடியும் மறைவெதென்னாள்?**

என்று எழுதியவர்;

**கடவுள் என்ற கட்டறுத்து**
**தொழில் உளாரை ஏவுவோம்**

என்று பிரகடனப்படுத்தியவர்;

**மண்மீதில் உழைப்போரெல்லாம் வறியராம்; உரிமை கேட்டால்**
**புண்மீதில் அம்பு பாய்ச்சும் புலையர் செல்வராம் இதைத்தன்**
**கண்மீதில் பகலிலெல்லாம் கண்டு கண்டு அந்திக்குப்பின்**
**விண்மீனாய் கொப்பளித்த விரிவானம் பாராய் தம்பி!**

என்று அழகியலை சமூக தளத்தில் கொண்டு சென்று நிறுத்தியவர். உழைக்கும் மக்களை சுரண்டி வஞ்சித்து வாழும் முதலாளித்துவத்தை பார்த்து வானத்தில் ஏற்பட்ட கொப்புளங்கள்தான் விண்மீன் என்று அழகியலை சமூக அவலத்தோடு பொருத்திப் பார்த்தார். இந்த சமூக அமைப்பை மாற்ற வேண்டும் என்று கவிதை சொன்னதால் அவர் புரட்சிக் கவிஞர்; அதுதான் அவர் அடையாளம்; ஆன்மிகமோ, அழகியலோ அல்ல.

அதேபோல வள்ளலாருக்கு எது அடையாளம்? வள்ளலார் ஒரு காலத்தில் சைவத்தை தூக்கிப் பிடித்தார். திருநீறு அணிந்திருந்தார். பதி, பசு, பாசம் என்கின்ற மெய்கண்ட தேவரின் சிவஞானபோதத்தை சைவ சித்தாந்தத்தை உள்வாங்கி ஒப்புக் கொண்டார். அதற்காக பல பாடல்களை பாடினார். அவர் எழுதிய ஆறு திருமறைகளில் ஐந்து திருமறைகள் சைவம் சார்ந்தவை. 200 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த ஒரு மனிதனை, நாம் ஆராய்ச்சி செய்வதில் பிழையில்லை. பார்க்கின்ற புதிய பார்வையில் தவறில்லை. என் பார்வை தவறாக கூட இருக்கலாம். ஆனால் வள்ளலார் ஒரு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர். அவர் சொன்ன ஆன்மிகம் எது? அவரின் தொடக்கப் புள்ளி எது? மையப் புள்ளி எது? முடிவில் என்ன சொன்னார்? எதை வைத்து வள்ளலாரை அடையாளப்படுத்துவது.

அவர் எந்த அடையாளத்தை தன் இறுதி அடையாளமாக கொள்ள வேண்டினார். எப்படி பாரதிதாசனுக்கு ‘சுப்ரமணிய துதியமுது’ அடையாளமில்லையோ - எப்படி கண்ணதாசனுக்கு கறுப்பு சிந்தனை கடவுள் மறுப்பு அடையாளமில்லையோ அப்படி வள்ளலாருக்கும் சைவமோ - இந்து மதமோ அடையாளமாக இருக்க முடியாது.

வள்ளலார் தோன்றி அவருடைய சிந்தனைகள் முழுமையாக முழு வீச்சிற்கு வீரியத்தோடு வந்த காலத்தில் இந்த உலகம் புதிய பாய்ச்சலை கண்ட காலம். 1848லிருந்து 1868க்குள் 20 ஆண்டுகள் உலகத்திற்கு ஒரு புதிய முகம் கிடைத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை, டார்வினின் புதிய தத்துவமான உயிர் கோட்பாட்டு பரிணாமக் கொள்கை, மைக்கேல் பாரடே மின்சாரத்தை கண்டுபிடித்த அறிவியல் விந்தை ஆகியவை யாவும் அந்த 20 ஆண்டுகளில்தான் நடந்தேறின. உலகத்தின் பொற்காலம், அந்த 20 ஆண்டுகள். அப்போது இந்த பூமிக்கு மின்சாரம், பொதுவுடமை தத்துவம், உண்மையான பரிணாம அறிவியல் கோட்பாடு இந்த மூன்றும் வந்த காலத்தில் - புழுங்கிய நேரத்தில் ராமலிங்கர் வாழ்ந்திருக்கிறார் என்பது இயற்கையாகவே ஒரு வரலாற்று தொடர்பு என்று நாம் கருத வேண்டும். உலகத்திற்கு புதுமை நிகழ்ந்தபோது தமிழ் நாட்டுக்கு வள்ளலார் புதுநெறியை கண்டு தந்தவர். அவர் ஏன் பசிப்பிணியை போக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஏனென்றால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் புறச் சூழல் தீர்மானிக்கிறது. இந்த சமுதாயம் என்னை எப்படி வைத்திருக்கிறதோ, எப்படி பார்க்கிறதோ அப்படித்தான் இந்த சமுதாயத்தை எதிர்த்து நான் எதிர்வினை ஆற்ற முடியும் அல்லது ஒத்துப் போக முடியும்.

### வள்ளலார் முன்னிறுத்திய வாழ்வியல் கொள்கை!

நான் ஏன் கருப்பு சட்டைக்காரனாக மாறினேன். என்னுடைய தந்தையார் கந்த சஷ்டி கவசம் சொல்லும்போது பக்கத்தில் இருந்து என்னுடைய காதில் விழுந்து விழுந்து விழுந்து எனக்கே மனப்பாடமான ஒரு சிறுவன். ஆனால் என்னுள் ஏதோ ஒரு வேதி மாற்றம், என்னை பெரியார் பக்கம் திருப்பியது. இது புறச் சூழல் எனக்கு கொடுத்திருக்கிற தாக்கம். அந்த தாக்கத்தின் விளைவு இன்றைக்கு நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருக்கிறேன்.

இப்படி ஒவ்வொருவருக்கும் புற மாற்றங்கள் ஏற்படுகிறபோது, அது ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன என்பதை உணர வேண்டும். ஏன் பசிப்பிணியைப் பற்றி வள்ளலார் கவலைப்பட்டார். 1860 களில் 50களில் வள்ளலார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் மிகப்பெரிய பஞ்சம் கொடி கட்டி கோலோச்சிய காலம். நான் இன்னும் பார்க்கிறேன்; அவர் சொன்ன ஜீவகாருண்யம் என்று சொல்கிறபோது அனைத்து உயிர்களிடத்திலும் கருணை, மனிதர்கள் மேல் மட்டுமல்ல; வள்ளலாருக்கு இருக்கும் மிகப்பெரிய சிறப்பு மனிதனை மனிதன் நேசி என்று சொன்னால் அது வேறு. பெரியார் அதைத்தான் சொன்னார், மனிதனை மனிதன் நேசி. மனிதன் கடவுளை நேசிக்க வேண்டும் என்று சொல்வது இன்னொரு ஆன்மத் தத்துவம். ஆனால் எல்லா உயிர்களிலிடத்திலும் கருணை காட்ட வேண்டும் என்பது வள்ளலாரின் பரந்து விரிந்த தத்துவம்.

ஆண்டவனிடத்தில் அன்பு வை. ஆண்டவன் காப்பாற்றுவார் என்று சொல்லவில்லை. ஆண்டவனிடத்தில் அன்பு, சக உயிர்களிடத்தில் கருணை, பசி போக்கல் இவைதான் ஒழுக்கமாக முன்னிறுத்தப்பட்டு ஜீவகாருண்யமாக வள்ளலாரால் வரிக்கப்பட்டு வாழ்வியல் கொள்கையாக முன்னிறுத்தப்பட்டது. இன்றைக்கும் வடலூரில் அவரால் ஏற்றிவைக்கப்பட்ட அணையா நெருப்பு இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது. எரிந்து கொண்டிருக்கின்ற அந்த அணையா விளக்கிலிருந்து பசிப்பிணிக்கு மருந்து கிடைக்கிறது. உணவளிக்கப்படுகிறது. இந்த ஜீவகாருண்யத்தை அவர் தோற்றுவிக்க வேண்டிய காரணம் என்ன? அவருக்கு என்ன அழுத்தம்? அங்கு இருந்துதான் அவருடைய சமூகப் பார்வையை, அவருடைய பொருளியல் பார்வையை பார்க்க வேண்டும். அவருடைய கொள்கைக்குப் பின்னால் வரலாற்று உண்மைகள் உள்ளது.

### திராவிட சமயம்!

சைவத்தையும் வைணவத்தையும் ‘சமயம்’ என்று குறிப்பிடுகிறார். வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் ‘மதம்’ என்று குறிப்பிடுகின்றார். என்ன தெரிகிறதென்றால் சைவமும் வைணவமும் மதம் அல்ல; சமயம். சமயம் தமிழ்ச் சொல். சமயம் என்றால் ‘பொருந்துதல்’ என்று பொருள். உலக வாழ்க்கைக்கு பொருந்த வேண்டியவை என்ற அடிப்படையில் அவைகள் உருவாக்கப்பட்டன. மதம் அப்படியல்ல. 1860 களில் வள்ளலார் வாழ்ந்தபோது சைவமும் வைணவமும் மதங்களல்ல; வேதாந்தம் சித்தாந்தம் இரண்டும் மதங்கள். இன்னும் விளக்கி சொல்வதாக இருந்தால் வள்ளலார் வாழ்ந்தபோது நாமெல்லாம் இந்துக்கள் அல்ல; ஏனென்றால் அப்போது இந்து மதம் இல்லை. சிவனை வழிபடுகின்றவர்கள் சைவர்களாக இருந்தார்கள்; திருமாலை வணங்குபவர்கள் வைணவர்களாக இருந்தார்கள். பிறகு இந்துக்களாக ஆக்கப்பட்டோம்.

வள்ளலார் சொன்னதை விரித்து இதற்கு மேல் பேசினால் என்னை இந்துக்களுக்கு எதிரி; இந்து மதத்தை இழிவு படுத்திவிட்டார் என்று கூச்சல் வரும். ஏன் சைவத்தை விட்டு வள்ளலார் வெளியே வந்தார் என்றால்; வைணவம் சைவம் இவற்றையெல்லாம் விட்டு ஒழியுங்கள் என்று ஏன் சொன்னார் என்றால்; இன்னும் குறிப்பாக சைவம் வைணவம் ஆகிய சமயங்களில் இருந்தும், வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய மதங்களில் இருந்தும் நீங்கள் விட்டு வெளியே வந்தால்தான் பேரின்ப இறைவனை அடைவதற்கு வழி கிடைக்கும் என்று உணர்ந்து உணர்த்தியவர். ஆரியர்களுக்கு ‘மதம்’ இருந்தது.

நம்முடையது திராவிட ‘சமயம்’. வைணவமும் சைவமும் இங்கே தோன்றியதுதான். அறுபத்து மூன்று நாயன்மார்களில் எல்லா சாதியும் இருந்திருக்கிறது. வண்ணார் முதல் வேடர் வரை. அந்தணர் முதல் ஆதிதிராவிடர் வரை. ஆழ்வார்களிலும் பல சாதிகள் பிரதிநிதித்துவம் இருந்ததே தவிர, சமத்துவத்தை நிலைநிறுத்த பக்தி இலக்கியங்களின் பங்கு என்ன என்று கணக்கிட்டால் சொற்பத்திலும் சொற்பம்.

**உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்;**
**பெண் ஆகிய பெருமான், மலை திருமா மணி திகழ;**
**மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்;**
**அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.**

என்று திருவண்ணாமலையில் இருக்கும் சிவனைப் பார்த்து பாடினார்களே தவிர, வினை அறுந்ததா, பசி ஒழிந்ததா என்று யாரும் கேட்கவில்லை;

**உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்;**
**மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்;**
**அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்;**
**துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே!**

என்று ஆழ்வார்கள் பாடினார்களே தவிர துயர் அறுந்ததா என்று பார்க்கவில்லை.

எனவே சைவமோ வைணவமோ மக்களின் பசியை நோயை நீக்கவில்லை; இவ்வுலக வாழ்க்கைக்கு தீர்வு தரவில்லை. இன்னொரு உலகத்தை வலியுறுத்திய சமயங்கள் அவை. எனவே சைவமோ வைணவமோ இங்கே இருந்த சமயங்கள் எதையும் வள்ளலார் தனது 6வது திருமறையில் ஒப்புக் கொள்ளவில்லை.

அதேப்போல வேதாந்தம் சித்தாந்தம் என்கின்ற ‘மதம்’ இருக்கிறதே, அதுதான் மதம் பிடித்தது. அதையும் விட்டு ஒழியுங்கள் என்று சொன்னார். அப்படி சொன்ன வள்ளலாருக்கு சொல்ல வேண்டிய தேவை என்ன இருந்தது? பசிப்பிணியை போக்க வேண்டிய அவசியம் என்ன இருந்தது? இப்போது இந்த 200 வருடங்களுக்குப் பின் அன்றைக்கு சமூகம், நாடு எப்படி இருந்தது என்று ஆராயுங்கள்.

அதற்குப் பிறகு பெரியார் வந்தார். அதற்குப் பிறகு அம்பேத்கர் வந்தார். பெரியார் என்ன சொன்னார்? இந்த மண்ணில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், சூத்திரர்களும் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கும் தற்குறித்தனத்திற்கும், ஏழ்மைக்கும் வறுமைக்கும் காரணம் இங்கே இருக்கும் சாதியும், மதமும் அதனால் அதனை ஒழிக்கிறேன் என்றார். ஏன் உங்கள் தாத்தா படிக்க வில்லை. என் தாத்தா படிக்கவில்லை. ஐ.பி. செந்தில் சட்டமன்ற உறுப்பினர், அவருடைய முன்னோர்களுக்கு ஏகப்பட்ட நிலம் இருந்திருக்கும்; பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்